1990 மார்ச் 19]

கடுமையான குற்றங்களைச் செய்திருக்கிறார்கள். அவர்களைக் கடுமையாகத் தண்டித்து, திருந்தியவர்களுக்காக பஞ்சாப், கேரளா போன்ற மாநிலங்களிலே பொது மன்னிப்பு வழங்கி எட்டு ஆண்டு களிலே விட்டிருப்பதைப் போல ஏற்பாடு செய்து தருமா என்று கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா தொடர்பற்றது.

திரு.வ. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே' தொலைக்காட்சியிலே சில நேரங்களில் திரைப்படமோ அல்லது நாடகமோ காட்டுகின்ற நேரத்திலே கைதியினுடைய மன நிலையைப் பாதிக்கின்ற அளவிலே அல்லது குற்றத்தை ஊக்குவிக் கின்ற அளவிலே படங்கள் வந்தால் அந்தப் படங்கள் கைதி களுக்குக் காட்டப்பட்டாத அளவிலே தடை செய்யப்படுமா? அதைப் போல வீடியோ மூலம் கைதிகளைத் திருத்துகின்ற வழியிலே, நெறிப்படுத்துகின்ற வகையிலே நல்ல தரமான படங்களை ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு ஒரு முறை போட்டுக் காட்ட ஆவன செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவரவர்களே, கூடுமான வரையில் சிறையிலே இருந்து தப்புகின்ற நிகழ்ச்சிகள் உள்ள படங்கள் சிறைச்சாலைகளிலே காட்டப்படாமல் இருப்பது நல்லது. கைதிகளை மேலும் தண்டிக்க வேண்டுமென்று விரும்பினால் சில படங்களை அவர்களுக்குப் போட்டுக் காட்டுவதும் நல்லது. (சிரிப்பு

(9—10 மணி)

திருமதி எஸ். பி. சற்குணம்: தலைவர் அவர்களே, சென்னை மத்திய சிறைச்சாலையில் பெண்களுக்கென்று தனிப்பகுதி இருக் கிறது. அங்கே தனியாக தொலைக்காட்சி வசதி செய்யப்பட இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு.எஸ். ஜே. சாதிக்பாட்சா: தலைவர் அவர்களே, அதுபற்றிய விவரம் என்னிடத்தில் இல்லை. ஆனால், மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் இந்தக் கேள்வியை அடிப்படையாக வைத்து அதுபற்றிப் பரிசீலிக்கலாம்.

சிவில் நீதிமன்றங்களுக்குக் கோடை விடுமுறை.

* 6039—திரு. என். பழனிவேல்: மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) சிவில் நீதிமன்றங்களுக்குக் கோடை விடுமுறை அளிக்கும் வழக்கம் மாற்றப்படுமா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா: தலைவர் அவர்களே

(அ) இல்லை.

(ஆ) இக் கேள்விக்கு இடமில்லை.

திரு. என். பழனிவேல்: தலைவர் அவர்களே, சிவில் நீதிமன்றங்களுக்குத் தற்போது கோடை விடுமுறை என்ற பெயரால் நீண்ட நாட்கள் விடுமுறை விடப்படுகிறது. இதனால் வழக்குகள் தேங்கி நீதி வழங்குவதில் காலதாமதம் ஏற்படுகிறது. ஆகவே அந்த முறையை மாற்றி, கோடை விடுமுறையை ரத்து செய்து, மற்ற அரசுத் துறைப்பணிகள் நடப்பது போல இவையும் நடப்பதற்குத் திட்டம் ஏதேனும் அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா: தலைவர் அவர்களே, இது நீண்ட நாளைய பிரச்சினை. சில ஆண்டுகளுக்கு முன்னால் இதுபோன்ற ஒரு கருத்து உருவாகி, அதன் அடிப்படையில் உயர் நீதிமன்றத்தின் ஆலோசனை கேட்கப்பட்டது. மற்ற மாநிலங்களுடைய நிலைமைகளை ஆராய்ந்து பார்த்ததில், மற்ற மாநிலங்களில் இதுபோன்ற கோடை விடுமுறை இருக்கிறது என்பதால், மீண்டும் உயர்நீதிமன்றத்தை நாம் கேட்டபோது, கோடை விடுமுறை தேவையென்று அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். எனவேதான், உயர்நீதிமன்றத்தினுடைய கருத்தை ஏற்றுக் கொண்டு கோடை விடுமுறைக்கு அனுமதி கொடுக்கப்பட்டிருக்கிறது.

திரு. என். பழனிவேல்: தலைவர் அவர்களே, சிவில் நீதிமன்றங்களில் போதிய அளவு நீதிபதிகள் இல்லாத காரணத்தினால் பல வருடங்களாக அரசுத்துறை வழக்குகளே கூட முடிக்கப்படாமல் இருக்கின்றன. இவற்றிற்குக் கோடை விடுமுறை விடுவதை நிறுத்த முடியாது என்று அமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். எனவே, நீதிபதிகளையாவது தேவையான அளவிற்கு உடனடியாக நியமித்து வழக்குகள் தேக்கத்தைக் குறைப்பதற்கு அரசு ஆணை பிறப்பிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா: தலைவர் அவர்களே, உறுப்பினர் அவர்களுடைய கேள்வி மூலக்கேள்விக்குத் தொடர்புடையது அல்ல தமிழ்நாட்டில் கிட்டத்தட்ட 75 இடங்கள் காலியாக இருப்பதாக அரசுக்குத் தெரிய வந்திருக்கிறது. அவற்றை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. தமிழ்நாடு பப்ளிக் சர்வீஸ் கமிஷன் மூலமாக இவர்களைத் தேர்ந்தெடுக்க அரசாங்கம் அறிவுரை கூறியிருக்கிறது. எனவே, தமிழ்நாடு பப்ளிக் சர்வீஸ் கமிஷன் மூலமாக அந்தத் தேர்வு விரைவாக நடக்கும் என்று எதிர்பார்க்கிறோம். மேலும் ஒரு யோசனை, அதாவது அட்ஹாக் ஜட்ஜஸ் நியமிக்கலாமா என்ற கருத்து இருக்கிறது. அட்ஹாக் ஜட்ஜஸ் நியமிப்பதற்கான குறிப்பை உயர் நீதிமன்றத்திற்கு அனுப்பியிருக்கிறோம். அதில் ஹை-கோர்ட்டின் கருத்து கிடைத்த பிறகு நடவடிக்கை எடுக்கப்படும்.

1990 மார்ச் 19]

திரு. அ. லெ. சுப்பிரமணியன்: தலைவர் அவர்களே, சிவில் நீதிமன்றங்களுக்கு விடுமுறை விடுவது ஆங்கிலேயர் காலத்துப் பழக்கம். அவர்கள் கோடை வெப்பத்தைத் தாங்க இயலாது என்ற காரணத்தினாலும், தாய் நாட்டிற்குத் திரும்ப வேண்டுமென்ற காரணத்தினாலும் அப்போது அந்த முறை கடைப்பிடிக்கப் பட்டது. இப்போது அந்த நிலை இல்லை. மேலும் ஆறுநாட்களாக இருந்த வேலைத்திட்டத்தை ஐந்து நாட்களாகக் குறைத்து இருக்கிறோம். ஆகவே, இப்படிப்பட்ட மாறுபட்ட சூழ்நிலையில் வழக்கறிஞர்கள் மற்றும் வழக்கு தொடுத்தவர்கள் நலனைக் கருதியும், வழக்குகள் நீண்ட நாட்களாகத் தேக்கத்தில் இருப்பதைக் கருதியும் சிவில் நீதிமன்றங்களுக்குக் கோடை விடுமுறை விடுவதை ரத்து செய்வதற்கு அரசு மீண்டும் பரிசீலிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா: தலைவர் அவர்களே, இது வெள்ளைக்காரன் காலத்துப் பழக்கம் மாத்திரமல்ல; 1947-க்கு பிறகு இங்கு ஏற்பட்ட வழக்கமாகவே வந்துவிட்டது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன கருத்து நல்ல கருத்துதான். மாண்புமிகு உறுப்பினர்களைப் போன்ற வழக்கறிஞர்கள் ஏகமனதாக, யுனானிமசாக, கோடை விடுமுறை தேவையில்லையென்ற தீர்மானத்தைப் போட்டுத் தருவார்களானால், பார் கவுன்சில், பார் அசோசியேஷன் மூலமாகத், தீர்மானத்தை நிறைவேற்றி அனுப்புவார்களானால், தமிழ்நாட்டில் உள்ள அத்தனை வழக்கறிஞர்களும் கோடை விடுமுறை தேவையில்லை என்று தெரிவிப்பார்களானால், அதை வைத்துக்கொண்டு உயர்நீதி மன்றத்தை நாம் வற்புறுத்திக் கேட்கலாம் என்று நான் கருதுகிறேன்.

திரு. யூ. கே. வெள்ளிங்கிரி: தலைவர் அவர்களே, கோடை கால விடுமுறை சம்பந்தமாக வந்துள்ள இந்தக் கேள்வியில் கோடை கால விடுமுறை விட்டே தீரவேண்டுமென்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். எனவே, அதிக நீதிபதிகளை விடுமுறை காலங்களில் போடுவதற்கு குறிப்பு எதுவும் அரசின் பரிசீலனையில் உள்ளதா? வழக்குகள் தேக்கத்தைக் குறைக்க அரசு இதை ஒரு ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளுமா என்று கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா: தலைவர் அவர்களே, அதைத்தான் நான் ஏற்கனவே குறிப்பிட்டேன். அட் ஹாக் ஜட்ஜஸ், இடைக்கால நீதிபதிகள் நியமிக்கலாமா என்று ஒரு குறிப்பு இருக்கிறது. அந்தக் குறிப்பு பற்றி உயர்நீதிமன்றத்தில் கருத்து கேட்டிருக்கிறோம். எந்தக் குறிப்பானாலும் உயர்நீதிமன்றத்தின் கருத்தைக் கேட்டுத்தான் முடிவு செய்ய வேண்டிய நிலை இருக்கிறது. எனவே, ஹைகோர்ட் முடிவு வந்த பிறகுதான் இதுபற்றி முடிவு சொல்ல முடியும்.

திரு. அ. இராசேந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உயர்நீதிமன்றம், மாவட்ட நீதிமன்றங்கள், வட்ட நீதிமன்றங்கள் ஆகியவற்றிற்கு விடுகின்ற விடுமுறைகளில் வித்தியாசங்கள் இருக்கின்றன. எனவே, அவைகளுக்கு ஒரே சீரான விடுமுறைகளை விடுவதற்கு உயர்நீதிமன்றத்திற்கு அரசு சிபாரிசு செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

(9-25 மணி)

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா: தலைவர் அவர்களே, உறுப்பினர் சொல்வதைப் போல, மாவட்ட நீதிமன்றங்களுக்கு 8 வாரங்கள் விடுமுறை என்றும், டிஸ்ட்ரிக்ட் முன்சிப் கோர்ட்டுகளுக்கு 6 வாரங்கள் விடுமுறை என்றும் இருக்கிறது. அதிலே வேறுபாடான நிலைதான் இருக்கிறது. இதை அரசாங்கம் முடிவு செய்ய முடியாது. உயர்நீதிமன்றம்தான் முடிவு செய்ய முடியும். எனவே நம்முடைய உறுப்பினர், தேவையானால் உயர்நீதி மன்றத்தில் ஒரு வழக்கைத் தொடர்ந்து, டிஸ்கிரிமினேசன் இருப்பதாகச் சொன்னால், ஒரு வேளை ஏற்றுக்கொள்வார்களா என்று எனக்குத் தெரியாது,

திரு. ஆர். சிங்காரம்: பேரவைத் தலைவர் அவர்களே, கோடை விடுமுறை நாட்களில் நீதிபதிகளுக்கு விடுமுறை விடுவது அவசியம் என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அந்தக் கோடை விடுமுறை நாட்களில் மட்டும், ஆக்டிங் நீதிபதிகளை, குமாஸ்தாக்களை நியமிக்க அரசு பரிசீலிக்குமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா: பேரவைத் தலைவர் அவர்களே, கோடை விடுமுறை விடப்பட்டாலும், வெக்கேசன் ஜட்ஜ் நியமிக்கப்படுகிறார்கள். அந்த வெக்கேசன் ஜட்ஜுகள் வாரம் ஒரு முறையோ அல்லது 2 முறையோ உட்கார்ந்து அவசர வழக்குகளைக் கவனிக்கிறார்கள்.

திரு. எஸ். காதர் பாட்சா என்கிற வெள்ளைச்சாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோடை விடுமுறைக் காலங்களில், உயர்நீதிமன்றங்களில் கோடை கால வெக்கேசன் ஜட்ஜுகள் இருக்கிறார்கள். அதைப் போலவே, மாவட்ட முன்சீப் கோர்ட் என்று சொல்லக்கூடிய உரிமையியல் நீதிமன்றங்களில் அவசரகாலத்தில் ஏதாவது இன்ஜக்சன் ஆர்டர் போன்றவைகளை வாங்குவதற்காக—அந்த விடுமுறைக் காலத்தில்—கோடைக் காலத்தில் இம்மாதிரியாக வெக்கேசன் முன்சீப்புகளை நியமிக்கிற உத்தேசம் அரசுக்கு உண்டா என்பதை அறிய விரும்புகிறேன்,

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா: தலைவர் அவர்களே. நான் ஏற்கனவே சொன்னதைப் போல, வெக்கேசன் ஜட்ஜுகள் நியமிக்கப்படுகிறார்கள். டிஸ்ட்ரிக்டுக்கு உள்ளே இருக்கிற அத்தனை வழக்குகளையும் கவனிப்பதற்காக ஒரு வெக்கேசன் அஸ்ட்ரிக்ட் ஜட்ஜ் என்ற அளவிற்கு நியமித்தால் வழக்குகளை அவர்கள் கவனித்துக்கொள்வார்கள்.